தி இந்து 7/10/2022

இந்து தமிழ் திசை 07/10/2022



# பெண்களை உயர்த்துவதுதான் தேசிய கல்விக் கொள்கை

## ● தெலங்கானா ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் கருத்து

● **கோவை**

பெண்களை வகுப்பறையில் இருந்து உலக அரங்குக்கு உயர்த்துவது தான் தேசிய கல்விக் கொள்கை என கோவையில் நடந்த விழாவில் தெலங்கானா ஆளுநரும், புதுச்சேரி துணை நிலை ஆளுநருமான தமிழிசை சவுந்தரராஜன் பேசினார்.

கோவை அவிநாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தில் '21-ம் நூற்றாண்டின் உயர் கல்விக்கு மாணவிகளை தயார்படுத்துதல்' என்ற தலைப்பில் கருத்தரங்கு நேற்று நடந்தது. இதில் தமிழிசை சவுந்தரராஜன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பேசியதாவது:

பெண்கள் உயர்கல்வியை அடைவதில் உள்ள தடைகளை கண்டறிய வேண்டும். பெண்களின் கல்விக்கு பிரதமர் மோடி முக்கியத்துவம் அளித்து வருகிறார். கழிவறை இல்லாததால் பள்ளிகளில் மாணவிகளின் இடைநிற்றலை தவிர்க்கதூய்மை பாரதம் திட்டத்தின் கீழ் கழிப்பறை வசதிகளை பிரதமர் ஏற்படுத்தியுள்ளார்.

உறுதியானவர்களை விமர்சனங்கள் தடுக்க முடியாது என்பதை நான் நிரூபித்துக் காட்டியுள்ளேன். பெண்களுக்கு துணிச்சலும், சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையும் இருக்க வேண்டும். தேசிய கல்விக் கொள்கையை அனைவரும் முழுமையாக படியுங்கள். அதை படிக்காமல் எதையும் கூறக் கூடாது. சிலர், அதில் மொழி திணிப்பு, குலக்கல்வி ஊக்குவிப்பு இருப்பதாக கூறுகின்றனர். இக்கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. தேசிய கல்விக் கொள்கையில் பாலின வேற்றுமை களையப்பட்டுள்ளது.



↑ கோவை அவிநாசிலிங்கம் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய தெலங்கானா ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன். உடன், நிர்வாக அறங்காவலர் டி.எஸ்.கே.மீனாட்சி சுந்தரம், வேந்தர் எஸ்.பி.தியாகராஜன், துணைவேந்தர் பாரதி ஹரிசங்கர். படம்: ஜெ.மனோகரன்

> பெண்கள் உயர்கல்வியில் பதக்கங்களை பெற்றாலும் ஆராய்ச்சி படிப்புகளில் ஆண்கள் ஆதிக்கம்தான் இருக்கிறது.

பெண்களை வகுப்பறையில் இருந்து உலக அரங்குக்கு உயர்த்துவதுதான் தேசிய கல்விக் கொள்கை. அதில், தாய்மொழி கல்வி ஊக்குவிக்கப்படுகிறது. பெண்களுக்கு அதிகளவிலான முக்கியத்துவம் அளிக்கும் வகையில் உள்ளது. பெண்கள் நூறு சதவீதம் கல்வி பெற வேண்டும் என்றும், 50 சதவீதம் பெண்கள் உயர்கல்வி செல்வதை உறுதி செய்ய வேண்டும் என்றும் தேசிய கல்விக் கொள்கை கூறுகிறது. பெண்கள் வேலை தேடுபவர்களாக இல்லாமல், வேலையை அளிக்கும் நபர்களாக மாற வேண்டும். பெண்கள் உயர் கல்வியில் பதக்கங்களை பெற்றாலும் ஆராய்ச்சி படிப்புகளில் ஆண்கள் ஆதிக்கம்தான் இருக்கிறது. இந்நிலையை மாற்ற வேண்டும். ஆராய்ச்சி மற்றும் தொழில் சார்ந்த துறைகளை பெண்கள் தேர்வு செய்ய வேண்டும். பெண்கள் முன்னேற்றத்துக்கு குடும்பத்தினர் ஊக்கம் அளிக்க வேண்டும். தோற்றத்தை பற்றி கவலைப்படாமல் இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், அவிநாசிலிங்கம் உயர்கல்வி நிறுவனத்தின் நிர்வாக அறங்காவலர் டி.எஸ்.கே.மீனாட்சி சுந்தரம், வேந்தர் எஸ்.பி.தியாகராஜன், துணை வேந்தர் வி.பாரதி ஹரிசங்கர், பதிவாளர் கவுசல்யா ஆகியோர் பேசினர். இந்நிகழ்வில் துறை தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.